DEPOSITION OF WITNESS

CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No. 57 /2021

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : வரதலட்சுமி | Father's/Husband's Name : | சின்னராமர் |
| Village | : வண்டப்புலி | Taluk | : பேரையூர் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.10.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** எத்தனை இலக்க சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று கேட்டால் 2 சொத்துக்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று கேட்டால் மொத்தம் 6 ½ செண்ட். தாவா சொத்தின் நான்கு மால் தெரியுமா என்று கேட்டால் வெளியூரில் இருப்பதால் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்கத் தெரியும். 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1வது லக்க சொத்திற்கு தெற்கு பக்கம் கிருஷ்ணன் மனை என்று குறிப்பிட்டுள்ளதில் கிருஷ்ணன் என்பவர் யார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி கிருஷ்ணன் யாரிடம் கிரையம் வாங்கி வீடு கட்டினார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கிருஷ்ணன் நாச்சிமுத்து என்பவரிடம் கிரையம் பெற்றார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) 2வது லக்க சொத்திற்கு வடக்கு பக்கம் பெருமாள் மனை என்று குறிப்பிட்டுள்ளதில் பெருமாள் என்பவர் யார் என்று தெரியுமா என்றால் 3ம் பிரதிவாதியின் உறவினர். 3ம் பிரதிவாதி தந்தை பெயர் முத்தையா என்றால் எனக்கு தெரியாது, நான் அவரை பார்த்ததில்லை. மேற்படி முத்தையாவின் உடன்பிறந்த சகோதரர் தான் பெருமாள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பெருமாளின் மகன் தான் 4ம் பிரதிவாதி என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வழக்குரையில் தாவா சொத்தை 20.01.2021ம் தேதி திருவாசகம் மற்றும் வித்யா ஆகியோரிமிருந்து வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் பெற்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி திருவாசகம் மற்றும் வித்யா ஆகியோர் கணவன் மனைவி என்றால் சரிதான்.

3) வழக்கின் 2வது அயிட்ட சொத்தை சென்றாயன் என்பவரிடமிருந்து எனது கணவர் சின்னராமர் வா.சா.ஆ.9 ஆவணம் மூலம் கிரையம் பெற்றார். மேற்படி சொத்து சென்றாயனுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். தாவா 2வது லக்க சொத்து சென்றாயனுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் அதற்கு ஆதரவாக நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. 1வது அயிட்ட சொத்து மாரிச்சாமி வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி எனது கணவர் சின்னராமர் வா.சா.ஆ.8 ஆவணம் மூலம் கிரையம் பெற்றிருக்கிறார் என்றால் சரிதான். மாரிச்சாமி மற்றும் சென்றாயன் ஆகியோர் தாவா 2 லக்க சொத்துக்களில் பாத்தியம் இருக்கிறது என்பதை காட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) திருவாசகம் மற்றும் வித்யா ஆகியோர் எனக்கு உறவினர் என்றால் இல்லை. மேற்படி திருவாசகம் மற்றும் வித்யா ஆகியோருக்கு எனது கணவர் தாவா 2 அயிட்ட சொத்துக்களை கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் கொடுத்த ஆவணம் வா.சா.ஆ.4, 5 என்றால் சரிதான். எனது கணவர் மேற்படியார்களுக்கு கிரையம் கொடுத்த பிறகு அந்த சொத்தை மறு கிரையம் பெற்றதற்கான காரணம் என்ன என்று கேட்டால் நான் கிரையம் கொடுத்த பிறகு பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால் மறு கிரையம் வாங்கினேன். நான் மேலே சொன்ன காரணத்திற்காக மறு கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் தாவா சொத்துக்கள் மாரிச்சாமி மற்றும் சென்றாயன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதால் தான் மறு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

5) எனது கணவர் கிரையம் வாங்கிய நபர்களுக்கோ அல்லது எனது கணவருக்கோ பாத்தியம் இல்லாத சொத்தை நான் அவர்களிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளதால் எனக்கும் தாவா சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முத்தையாவிற்கு பாத்தியப்பட்டிருந்து அவர் இறந்தபிறகு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி முத்தையா கடந்த 08.11.1985ம் தேதி பெரியகுளம் கோட்ட கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திடம் கடன் பெற்று வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் பெருமாள் இடம் என்று சொல்லியுள்ளதில் பெருமாள் என்பவர் வீரணன் மகன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாக்கல்

செய்துள்ள மின் இணைப்பு, ரசீது வீட்டு வரி இரசீது தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6) தாவா சொத்திற்கு மின் இணைப்பு கேட்டு பிரதிவாதிகள் மனு செய்தார்கள் என்றாலும் அதற்கு நாங்கள் ஆட்சேபணை செய்தோம் என்றாலும் சரிதான், வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று ஆட்சேபணை செய்தோம். தற்போது தாவா சொத்தில் மின் இணைப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. இன்று வரை வீட்டு வரி, மின் கட்டணம் செலுத்தி வருகிறோம். பிரதிவாதிகள் மீது கடநத் 25.07.2021ம் தேதி எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் சம்பந்தமாக காவல்நிலையத்தில் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். வழக்கு விசாரணையின் போது தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றும் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக் கொள்ளச் சொன்னார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்றாலும் நான் அனுபவத்தில் இல்லை என்று சொன்னாலும் நான் பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 28.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.28 17:48:14 +0530

District Munsif,
Aundipatti.